தினமணி
www.dinamani.com

# விஞ்ஞானிக்கு வன ஆராய்ச்சிக்கான தேசிய விருது

**கோவை, ஜன. 19:** கோவை வனமரபியல் மற்றும் மரபெருக்கு நிறுவனத்தின் முதுநிலை விஞ்ஞானிக்கு தலைசிறந்த வன ஆராய்ச்சிக்கான தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

கோவையில் உள்ள வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில் முதுநிலை விஞ்ஞானியாகப் பணியாற்றி வருபவர் கண்ணன் வாரியர்.



கண்ணன் வாரியர்.

இவருக்கு இந்திய வன ஆராய்ச்சி மற்றும் கல்விக் கழகம் சார்பில் 2019ஆம் ஆண்டிற்கான தலைசிறந்த வன ஆய்வுக்கான தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

உப்பு நீரால் பாதிப்படைந்த நிலங்களில் வளர்வதற்கு ஏற்ற சவுக்கு ரகங்களை உருவாக்கி வெளியிட்டுள்ளார். இதனால் 6.73 மில்லியன் ஹெக்டேர் நிலங்கள் பயன்பெற உள்ளன. வன ஆய்வில் 27 ஆண்டுகள் அனுபவம் பெற்றுள்ள இவர் 232 ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

உலக உணவுக் கழகம், ஐக்கிய நாடுகளின் வனப் பணிக் குழுமம் ஆகிய உயர்மட்டக் குழுக்களில் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். ஆந்திரம் மற்றும் கேரள வன வளர்ச்சிக் கழகங்களுக்கு ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். தேசிய வன வளர்ப்புத் திட்ட மதிப்பீட்டுக் குழு உறுப்பினராக உள்ளார்.

119. News in Dinamani, 19.01.2021, Coimbatore, National Award of Excellence for Outstanding Research in Forestry.